



முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு மத்திய மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில் பவானி தொகுதியின் பூத் ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. பவானி கே.எம்.பி. மஹாலில் ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் தலைமையில் பவானி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் கலந்து கொண்டு வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் எவ்வாறு தேர்தல் களப்பணிகள் ஆற்றுவது என்பது குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் பவானி நகர செயலாளர் ப.சீ.நாகராசன், பவானி ஒன்றிய கழக செயலாளர்கள் தெற்கு கே.பி.துரைராஜ் வடக்கு கே.ஏ.சேகர், அம்மாபேட்டை வடக்கு எஸ்.சரவணன் தெற்கு எம்.ஈஸ்வரன் உள்ளிட்ட பேரூர் கழக செயலாளர்கள், பவானி தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள், மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டத்தில் மாணவர்களுக்காக

# ரூ.19.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயிற்சி மையம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்!

அரியலூர், ஏப், 24 -

அரியலூர் மாவட்டம், அரியலூர் மாவட்ட மைய நூலகத்தில் தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை, அரியலூர் மாவட்ட நூலக ஆணைக்குழு சார்பில் பொதுப்பணித்துறையின் மூலம் ரூ.19.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள போட்டித் தேர்வு மாணவ, மாணவிகளுக்கான பயிற்சி மையத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார். மேலும், ரூ.22.30 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட மைய நூலக வளாகத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் பணிகளுக்கு 20.04.2025 அன்று அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி. தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தமிழ்நாட்டில் குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களை ஈர்க்கும் வகையில் பொது நூலக கட்டடங்களை மேம்படுத்திடும் வண்ணம் பொது நூலகங்களில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படுவதுடன், மேசைகள், நாற்காலிகள் போன்ற தளவாடங்களும், கணினி தொடர்புடைய சாதனங்கள் மற்றும் புத்தகங்களும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 11.04.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ.84.76 கோடி செலவில் அரியலூர் மாவட்டம், அய்யூர், குருவாலப்பர்கோவில், குமிழியம், கீழப்பழுவூர் கிராமங்களில் கட்டப்பட்டுள்ள 4 புதிய பொது நூலகங்கள் உட்பட 326 புதிய நூலக கட்டடங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் அரியலூர் மாவட்ட மைய நூலகத்தில் பொதுப்பணித்துறையின் மூலம் ரூ.19.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள போட்டித் தேர்வு மாணவ, மாணவிகளுக்கான பயிற்சி மையத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து, குத்து விளக்கேற்றி வைத்தார். பின்னர், ரூ.22.30 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட மைய நூலக வளா கத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டி வைத்தார்.

பின்னர், அரியலூர் மாவட்ட மைய நூலகத்தில் பயின்று தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி - IV தேர்வில் வெற்றிப் பெற்று அரசுப்பணிகளில் சேர்ந்துள்ள மாணவ, மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பொன்னாடை போற்றி, புத்தகங்களை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் போட்டித்தேர்வுக்கு பயிலும் மாணவ, மாணவிகள் பயன்பாட்டிற்காக நீர் சுத்திகரிப்பானை நன்கொடையாக அளிப்பதற்கு ரூ.50,000க்கான காசோலை ஏ.கே.எம், ஐ.ஏ.எஸ் அகாடமி மூலம் வழங்கப்பட்டது. பின்னர், மைய நூலக வளர்ச்சிக்கு ரூ.1000 தொகையினை புதிய புரவலர்களாக இணைய உள்ளவர்கள் வழங்கினர். இதே போன்று மருதூர் கிளை நூலகத்தின் 50வது புரவலர் தொகையினை அரியலூர் வாசக வட்டத் தலைவர் அவர்கள் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி - IV தேர்வில் வெற்றிப்பெற்று அரசுப்பணியில் சேர்ந்துள்ள பெரியசாமி என்பவர் தெரிவிக்கையில் நான் ஒட்டக்கோவில் ஊராட்சி, கூத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கடந்த சில ஆண்டுகளாக TNPSC தேர்வுக்காக படித்து வருகிறேன். எனது பயிற்சிக்கான அனைத்து புத்தகங்களும் மாவட்ட நூலகத்தில் கிடைத்தது. மற்ற பிற புத்தகங்கள் தேவை இருக்கும் போது நூலகத்தினர் அதனை ஏற்படுத்தி கொடுத்தனர். நான் 2024 நடத்த குரூப்4 தேர்வில் வெற்றிப்பெற்று திருவாரூர் மாவட்டத்தில் கிராம நிர்வாக அலுவலர் பணியினை தேர்வு செய்துள்ளேன். மாவட்ட நூலகங்களில் போட்டித்தேர்வு பயிற்சிகளுக்கு தேவையான உதவிகளை வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு நன்றி என தெரிவித்தார்.

இதேபோன்று தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி - IV தேர்வில் வெற்றி ப் பெற்று அரசுப்பணியில் சேர்ந்துள்ள செல்வி.ரஞ்சிதா என்பவர் தெரிவிக்கையில் நான் பொன்பரப்பி கிராமத்திலிருந்து வருகிறேன். நான் TNPSC தேர்வுக்காக படித்து வருகிறேன். தினசரி மாவட்ட மைய நூலகத்தில்தான் படித்து வந்தேன். போட்டித்தேர்வுகளுக்கு படிப்பவர்களுக்கு தேவையான புத்தகங்கள் நூலகத்தில் இருந்தது. மேலும். நான் 2024 நடைபெற்ற தமிழ்நாடு அரசின் குரூப்4 தேர்வில் பெற்றிப் பெற்று சென்னை, சுகாதார துறையினை தேர்வு செய்துள்ளேன். என்னைப்போன்று போட்டித் தேர்வுக்கு பயின்று வருபவர்களுக்கு தேர்வினை எதிர்கொள்ளும் வகையில் நூலகங்களில் சிறப்பான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு அரசுக்கு நன்றி என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் கோவிந்தராஜ், மாவட்ட நூலக அலுவலர் வேல்முருகன், அரியலூர் வட்டாட்சியர் முத்துலெட்சுமி, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், நகர கழக செயலாளர் இரா. முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மா.இராஜேந்திரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் அருண்ராஜா, அரியலூர் நகர்மன்ற உறுப்பினர்கள், நூலக புரவலர்கள், வாசகர்கள், போட்டித்தேர்வு மாணவ, மாணவிகள், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் பொன்முடி மீது வழக்குப் பதிவு செய்யக் கோரி மனு தாக்கல்!

# மனுவை தள்ளுபடி செய்து உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவு!

மதுரை, ஏப். 24 -

கடந்த ஏப்ரல் ஐந்தாம் தேதி சென்னையில் பெரியார் பெருத்தொண்டர் திருவாரூர் தங்கராசு அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட தமிழக வனத்துறை அமைச்சர் பொன்முடி அவர்கள் தான் ஒரு பெரியாரின் தொண்டர் என்றும் பகுத்தறிவு பேராசிரியர் அணியில் இருந்ததாகவும் அப்பொழுது அடல்ஸ் ஒன்லி என்ற பெயரில் பட்டிமன்றம் நடந்ததாகவும் அந்த பட்டிமன்றத்தில் நடந்ததை குறித்து விவரித்தார்.

கூட்டத்தில் சைவம் மற்றும் வைணவம் ஆகிய குறித்து அவதூறாகவும் மதக்கலவரங்களை உண்டாக்கும் வகையில் பேசி உள்ளார். எனவே இவர் மீது உரிய வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்த வேண்டும் என புதூர் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தேன். புகாரின் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனு நேற்று முன்தினம் நீதிபதி தனபால் முன்பு விசாரணைக்கு வந்தது. விசாரணையின் போது அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் அன்பு நிதி. மனுதாரர் புகார் மனு விசாரணை செய்யப்பட்டு முடிக்கப்ப ட்டுள்ளது. எனவே இதில் வழக்குப் பதிவு செய்ய தேவையில்லை. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென வாதிட்டார். இதனை பதிவு செய்த நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தார்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மாணவர் அணி துணை அமைப்பாளர் ராமச்சந்திரன் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் தலைமையில் ஒன்றிய கழக செயலாளர் பி.கோவிந்தன், மாணவர் அணி அமைப்பாளர் ஜெயேந்திரன் அவர்களின் முன்னிலையில் நீர் மோர் பந்தல் திறக்கப்பட்டு பொதுமக்களுக்கு தர்பூசணி வாழைப்பழம், முலாம்பழம், சாத்துக்குடி, நுங்கு, இளநீர், மோர் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம் வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம் வேலுமணி உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், மீனம்பட்டியில் ஜல்லிக்கட்டுப் போட்டியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 13.04.2025 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா , புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### ரூ.40 கோடி செலவில் 230 படுக்கை வசதிகளுடன் - குளித்தலை அரசு மருத்துவமனையை

# மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரமுயர்த்தும் பணி!

## விரைவில் நிறைவுறும் என - பேரவையில், அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

**சென்னை, ஏப்.24 -**

**முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, குளித்தலை அரசு மருத்துவமனையை மாவட்ட அரசு தலைமை மருத்துவனையாக தரமுயர்த்தும் பணி ரூ.40 கோடி செலவில் 230 படுக்கை வசதிகளுடன் நிறைவுற்று மிக விரைவில் பயன்பாட்டிற்கு வர உள்ளது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (22.4.2025) சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது குறிப்பிட்டார்.**



குளித்தலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாணிக்கம் கேள்விக்கு ,

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்:**

கரூர் மாவட்டம், குளித்தலை தொகுதி, தோகமலை ஒன்றியத்திற்குட்பட்ட அ.உடையாப்பட்டி துணை சுகாதார நிலைய கட்டிடம் மிகவும் பழுதடைந்து, பயன்படுத்த இயலாத நிலையில் இருந்ததால் தற்போது வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அ.உடையாப்பட்டி துணை சுகாதார நிலைய கட்டிடத்திற்கு பொதுப்பணித்துறையிடமிருந்து தகுதியின்மை சான்று பெறப்பட்டு 2025-26 ஆம் ஆண்டில் 15வது நிதிக்குழு மானிய நிதியி லிருந்து ஒதுக்கீடு செய்து புதிய கட்டிடம் கட்டுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் இன்னும் 4200க்கும் மேற்பட்ட துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டிடங்கள் தேவைப்படுகின்றன. முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலைப்பெற்று, முன்னுரிமை அடிப்படையில் எந்தெந்தக் கட்டிடம் அமைத்துத்தர வேண்டுமோ அதை அமைத்து தருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். அந்தவகையில் அவர் தொகுதிக்குட்பட்ட கட்டிடங் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குளித்தலை தொகுதியில் இருக்கிற அரசு மருத்துவமனையை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரமுயர்த்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ரூ.40 கோடி செலவில் 230 படுக்கை வசதிகளுடன் 1,09,125 சதுர அடியில் தரைத்தளம் மற்றும் நான்கு தளங்கள் கொண்ட கட்டிடப் பணிகள் 90 சதவிகிதம் முடியும் தருவாயில் இருக்கின்றன. மேலும், அந்தக் கட்டிடத்திற்கு தேவையான கூடுதல் வசதிகளை நிதி ஆதாரத்திற்கேற்ப, நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பதிலளித்தார்.

### நல்ல முறையில் இத்திட்டம் செயல்பாட்டிற்கு வரும்!

# மினி பேருந்துகள் 1500க்கும் மேற்பட்டவை இயக்க நடவடிக்கை!

## சட்டப் பேரவையில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தகவல்!

சென்னை, ஏப். 24 -

சட்டப் பேரவையில் மினி பேருந்து இயக்குவது சம்பந்தமாக நடைபெற்ற விவாதம் வருமாறு:

**பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி:** முன்னாள் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட அற்புதமான திட்டம் இந்தச் சிற்றுந்து திட்டம். இப்போது மீண்டும் நம்முடைய முதல்வர் அவர்கள் அந்தச் சிற்றுந்துத் திட்டத்தை அமுல்படுத்தியிருக்கிறார்கள். அதை மே ஒன்றாம் தேதியன்று துவக்க இருக்கிறார்கள். ஆனால், அதை இயக்குவதற்கு தனியார்களுக்கு permitகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த wheel base உள்ள பேருந்துகள் கிடைக்க வில்லை. அந்த wheel baseஐ உயர்த்தித் தந்தால்தான் அந்த mini busகளை அவர்கள் வாங்கி இயக்க முடியும். புதிய பேருந்துகளும் இப்போது கிடைப்பதில்லை.

ஆகவே, அமைச்சர் அவர்கள் இதை மனதிலே கொண்டு, அந்த wheel baseகளை மாற்றித் தந்தால் பல பள்ளிக்கூட பேருந்துகளையெல்லாம் அவர்கள் வாங்கி, பழைய பேருந்துகளை,

அந்தச் சிற்றுந்திலே அவர்கள் இயக்க ஆவன செய்ய முடியும். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதில் தனி கவனம் செலுத்தி தொடர்ந்து இந்தத் திட்டதை தடுப்பதற்காக சில சூழ்நிலைகள் உருவாவது இல்லாமல் அனைத்து கிராமப்புற ஏழையெளிய மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே இந்தச் சிற்றுந்துகளை ஆணைகளுக்கு அவர்கள் வண்டிகளை வாங்கி இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் பேருந்துகள் இயக்குவதிலே மிகுந்த அனுபவம் கொண்டவர். அவர் கூறுகின்ற ஆலோசனை முக்கியமான ஆலோசனைதான். ஆனால், wheel baseஐ அதிகரித்தால் பெரிய பேருந்துகளுக்கும் அதற்கும் பிரச்சினை வரும்.

ஏற்கெனவே, பெரிய பேருந்துகள் இயக்குகின்றவர்களுக்கு, இந்த மினி பேருந்துகள் இயக்குகின்ற வழித்தடங்கள் குறித்த பல்வேறு கருத்துகள் இருக்கின்றன.

எனவே, நிர்வாக சிக்கல் வராமல் இருப்பதற்காகத்தான் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்த மினி பேருந்துத் திட்டம் நலிவடைந்திருந்ததை மீண்டும் சரிசெய்வதற்கு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, இப்போது அந்தப் பேருந்துகள் புதிய பேருந்து நிலையங்களோ அல்லது பக்கத்தில் இருக்கிற அரசு மருத்துவமனைகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரி போன்ற இடங்கள் வரைக்கும் கூடுதலாக இயக்குவதற்கு பல்வேறு சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன.



எனவே, அதன்மூலம் இந்தப் பேருந்துகள்—கிட்டத்தட்ட 1,500க்கும் மேற்பட்ட permitகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பலரும் புதிய பேருந்துகளும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக நல்ல முறையில் இத்திட்டம் செயல்பாட்டிற்கு வரும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெங்களூர் வி.டி.சண்முகம்

### ஏப்ரல் 24 (2018)



**தி.மு.கழகம் தொடங்கிய போதே, கர்நாடக மாநிலத்தில் தனது 12 வயதில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கி, 50 ஆண்டுகளுக்கு மேலாக உறுப்பினராகவும், கிளை கழகச் செயலாளராகவும், தலைமைப் பொதுக்குழு உறுப்பினராகவும், கர்நாடக மாநில அமைப்பாளராக, மாநில பொறுப்புக் குழுத் தலைவராக கழகப் பணியாற்றியவர்.**

**கருநாடக மாநிலத்தில் கழகத்திற்கென "கலைஞரகம்" எனும் மூன்று அடுக்கு மாடிக் கட்டிடத்தை பெங்களூர் இராமச்சந்திராபுரம் பகுதியில் கட்டுவதற்கு அரும்பாடுபட்டவர்.**

**பிரதமர் நேருவுக்கு கறுப்பு கொடி, இந்திரா காந்தி அம்மையாருக்கு எதிராக கறுப்பு கொடி, ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக இரயில் மறியல் போராட்டம், சட்ட எரிப்பு போராட்டம் என கழகம் அறிவித்த பல போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.